| Spl S.CNo. | 17/2022 (CC No.3/2018) | Deposition of | PW. 50 (LW. 60 ) |
|---|---|---|---|
| Name | Tr. Arumugam | Date | 22.09.2025 |

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். எதிரிகள் சார்பில் குவிமுச 311 கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு விசாரணை தொடங்கியது.**

**1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம்11.47 A.M**

நான் பார்வை மகசர் அ.த.சா.ஆ 178ல் என் கையொப்பத்திற்கு கீழே என்னுடைய வசிப்பிட முகவரியை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட முகவரியில் தான் வசித்து வருகிறேன் என்பதற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணத்தை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. நான் 20 வருட காலமாக சலூன் கடை வைத்து நடத்தி வருவதற்கு ஆதாரமாக ஏதேனும் ஆவணத்தை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. எனக்கு திசைகள் குறித்து சரியாக தெரியாது. சுப்ரமணியம்பாளையம் ரோடு கோயம்புத்தூரில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் சாலைக்கு கிழக்கே எவ்வளவு தூரம் நீளம் என்றால் 3 கிமீ தூரம் இருக்கும். சுப்ரமணியம்பாளையம் ரோட்டிற்கு இருபுறமும் பல்வேறு வீடுகள், கடைகள் மற்றும் சந்துகள் ஆகியவை உள்ளன என்றால் சரிதான். சுப்ரமணியம்பாளையம் ரோட்டில் இருபுறமும் பல்வேறு வீடுகள், கடைகள் மற்றும் சந்துகள் ஆகியவை சேர்த்து 3கிமீ சுற்றளவில் அங்கு 3000 ஸ்தாபனங்கள், வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். சுப்ரமணியம்பாளையம் ரோட்டில் கார், பஸ் ஆகியவை செல்லும் அளவிற்கு அகலமான சாலை என்றால் சரிதான். இரவு நேரங்கள் மற்றும் அதிகாலை நேரத்தை தவிர காலை 9.00 மணி முதல்

மாலை 6.00 மணி வரை அங்கு போக்குவரத்து மிகுதியாக இருக்கும் என்றால் சரிதான். போலீசார் தோராயமாக அன்றைய தினம் எத்தனை மணிக்கு அங்கு வந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. என்னை போலீசார் சாட்சி கையொப்பம் இடுவதற்காக அழைத்த அன்று எழுத்து மூலமான அழைப்பாணை ஏதேனும் கொடுத்து வரச் சொன்னார்களா என்றால் இல்லை. பார்வை மகசர், வரைபடம் எத்தனை மணிக்கு தயார் செய்ய ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடித்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. பார்வை மகசர் மற்றும் வரைபடத்தின் நகல் ஏதேனும் போலீசார் என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் சலூன் கடை நடத்துவதற்கு கோவை மாநகராட்சியிலோ அல்லது Tamil Nadu Shop and Establishment Act-ன் கீழே ஏதேனும் உரிமம் பெற்றிருக்கிறேனா என்றால் எங்களுக்கு அவ்வாறு இல்லை, அதனால் உரிமம் எதுவும் பெறவில்லை. நான் சலூன் நடத்தி வந்த இடம் வாடகை இடமாகும். வாடகை இடத்தின் உரிமையாளர் அப்போது இறந்துவிட்டார். என்னுடன் கையொப்பம் இட்ட மற்றொரு சாட்சி எங்கு சென்றார் என்று எனக்குத் தெரியாது. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் நான் பார்வை மகசரில் கையொப்பம் இடவில்லை என்றால் சரியல்ல.

**1 முதல் 5 வரையிலான எதிரிகளுக்கான குறுக்கு விசாரணை முடிவடைந்த நேரம் 12.05 P.M**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Sd/- (S.MALARVIZHI)
District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.